செ.வெ.எண்:73 /ஆகஸ்ட்/ 2021 நாள்: 23.08.2021

<u>செய்திக் குறிப்பு</u>

**காரீப் பருவ பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய திருச்சிராப்பள்ளி மாவட்ட விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப.,அவர்கள் வேண்டுகோள்.**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டு பிரதம மந்திரி பயிர்காப்பீடுத் திட்டத்தில் காரீப் பருவத்தில் பிர்கா அளவில் நிலக்கடலை, துவரை, பருத்தி, சோளம் மற்றும் கம்பு பயிர்களை பயிர் காப்பீடு செய்ய உத்தரவு பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்யும் கடன் பெறும் விவசாயிகள் தாங்கள் கடன் பெறும் வங்கிகளிலும், கடன் பெறாத விவசாயிகள் பொது சேவை மையங்கள் மூலமாகவோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாகவோ அவர்கள் விருப்பத்தின் பேரில் பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம்.

காரீப் பருவத்தில் ஏக்கருக்கு நிலக்கடலை பயிருக்கு ரூ.574/- துவரை பயிருக்கு ரூ.341.90/- பருத்தி பயிருக்கு ரூ.410.34/- சோளப் பயிருக்கு ரூ228/- மற்றும் கம்பு பயிருக்கு ரூ.200.50/- செலுத்தி பயிர் காப்பீடு செய்து கொள்ள 31.08.2021 ஆம் தேதி கடைசி நாளாகும்.

விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யும் போது முன்மொழிவு விண்ணபத்துடன், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல், வங்கிக் கணக்கு புத்தகத்தின் (Bank pass book) முதல் பக்க நகல், ஆதார் அட்டை (Aadhar Card) நகல் ஆகியவற்றை இணைத்து, கட்டணத் தொகையை செலுத்தியபின் அதற்கான இரசீதை அந்தந்த பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் பயிர் காப்பீடு செய்வது குறித்து விவசாயிகளுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள அலுவலர்களை அணுகி விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, விவசாயிகள் அனைவரும் இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் இழப்பீடுகளில் இருந்து பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள பயிர் காப்பீடு செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**